படுத்துவதில் உள்ள இடையூறுகள் ஆகியவைபற்றிய பல்வேறு கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கருத்துரைகள் முற்றிலும் ஏட்டளவே ஆகும்; அறிக்கையிலிருந்து உருவான பலன் ஏதும் விளையாது எனலாம்.

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே என்னுடைய பகுதியில் இனும் கிராமங்கள் சர்வே செய்யப் படாமல் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்களிலே புஞ்சைச் சாகுபடி செய்யப்படுகிறது. அந்த நிலங்களைப் பஞ்சாயத்திலே ஒப்படைக்கவேண்டு மென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மேலும் அந்த நிலங்கள் சர்வே செய்யப்படாமல் இருப்பதால் இனம்தாரர்களுடைய அனுபவத்தில் இருப்பதாக அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்திருப்பதால், அவற்றை பஞ்சாயத்திலே ஒப்படைப்பதற்கும் விவசாயிகள் பயனடைவ தற்கும் அது தடையாகலாம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? எனவே அப்படித் தடைகள் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இனம் நோடிபிகேஷன் செய்தபிறகு அங்கே சர்வே வேலைகள் நிச்சயமாக நடைபெறும். அதன்பிறகு இவை நடக்கும்.

Tax on gases

* 13 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether gas for use of catering is being taxed at source; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) புர்சேன், கால்கேஸ், இன்டேன் போன்ற எரி பொருள் வாயுக் களுக்கு இம்மாநிலத்தில் முதல் விற்பனை நிலையில் 7 சதவீத ஒரு முனை வரி விதிக்கப்படுகிறது.

THIRU N. DENNIS : As it is an essential domestic article, may I know from the Hon. Minister whether tax would be collected in such a way as to save the purchasers from tax burden?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே பலமுனை வரியாக இருந்தது, இந்த மாமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் ஒரு முனை வரியாக மாற்றப்பட்டிருக்கிறது.

நந்தியாலத்தில் மனு நீதித் திட்டம்

* 14 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு, வாலாஜா வட்டம், நந்தியாலம் கிராமத்தில் 1969-70-ல் மனு நீதித்திட்டம் நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதில் எத்தனை மனுக்கள் இன்று வரை பரிசீலனை செய்யப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) மொத்தம் 82 மனுக்கள் கொடுக்கப்பட்டன. அவற்றில் 47 மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பைசலாகியுள்ளன. மீதியுள்ள 35 மனுக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. இவற்றின்மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பைசலாகியுள்ள 47 மனுக்களின் விபரம் பின்வருமாறு—

பதிவு மாற்றம் சம்பந்தப்பட்டவை	12
பாலாறு பேசின் விதிகள்	
நில ஒப்படைப்பு	10
இதர விசயங்கள்	25
	47

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, வாலாஜா வட்டத்தில் உள்ள இந்த நந்தியாலம் பகுதியிலே சாணாரம்பட்டு, மாங்குப்பம் கிராமங்களுக்குப் போய்வர சாலை வசதிகள் வேண்டுமென்று அந்தப் பகுதிகளிலேயுள்ள மக்கள் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கிராமங்களுக்கு மனிதர்கள் கால் நடைப் பாதை வழியாகவே நடந்து செல்லவேண்டும். வேறு வசதிகள் இல்லை. எனவே, பாதை வசதிகள் அங்கே ஏற்படுத்தித் தருவதற்கு அந்த மனுக் களிலே கேட்டுக்கொண்டுள்ளபடி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடி யாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எல்லோரும் எல்லாக் கிராமங் களுக்கும் காலால்தான் நடந்து செல்லவேண்டும். அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. குறிப்பாக எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்.

நீதி மன்றங்கள்

***15 வினா**—**திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டத்தில் ஓர் முன்சிப் கோர்ட் ஏற்படுத்தத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, செஞ்சியிலிருந்து திண்டிவனத்திலிருக்கின்ற முன்சீப் கோர்ட்டிற்குச் சராசரியாக அதிகமான கேஸ்கள் சென்று கொண்டிருக்கின்றன. அங்கேயுள்ளவர்கள் எல்லாம் பல மனுக்கள் கொடுத்து செஞ்சியில் ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்தவேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். திண்டிவனத்திலே ஒரு அடிஷனல் முன்சீப் கோர்ட் ஏற்படுத்துவதற்குப் பதிலாகத் தனியாக செஞ்சியிலே ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: செஞ்சியிலிருந்து திண்டிவனம் 18 மைல் என்று கருதுகிறேன். அங்கே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் வைக்கலாம்